# எம்பிலிபிட்டிய நகர சபை
# இரத்தினபுரி மாவட்டம்

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2015 மார்ச் 31 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2014 மார்ச் 31 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2015 ஆகஸ்ட் 10 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து, எம்பிலிபிட்டிய பிரதேச சபையின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்படுகின்றன.

(அ) நிதிச் செயற்பாட்டுக் கூற்றில் காண்பிக்கப்பட்ட மீளாய்வாண்டின் மிகை ரூபா 6,403,435 தொகையான போதிலும், திரண்ட நிதியக் கணக்கில் ரூபா 15,159,172 தொகையான பிரதான பேரேட்டில் தயாரிக்கப்பட்டிருந்த ஞபகார்த்தப் பேரேட்டுக் கணக்கின் மீதியே சீராக்கப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 234,263 தொகையான கொடுத்த கழிவு மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்களின் கீழ் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டின் போது வைப்புச் செய்யப்பட்ட எனினும், மதிப்பிழந்த காசோலைகளின் பெறுமதியான ரூபா 296,046 தொகை, நிதிக்கூற்றுக்களின் கீழ் செலவின அதிகரிப்பாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) முன்னைய ஆண்டின் கணக்காய்வு அறிக்கையின் மூலம் காண்பிக்கப்பட்ட குத்தகையின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட கப் வண்டியின் கடன் பெறுமதியான ரூபா 7,750,000 கணக்கீடு செய்யப்படுகையில் நேர்ந்த தவறு மீளாய்வாண்டின் போது சீராக்கப்படுகையில் நாட்குறிப்பு இல. 16 இன் கீழ் திரண்ட நிதியக் கணக்கிற்கு செலவு வைக்கப்படுவதற்குப் பதிலாக ஞாபகார்த்த வருமானச் செலவினக் கணக்கில் பதியப்பட்டிருந்தது.

(உ) குத்தகையின் மூலம் கொள்வனவு செய்யப்பட்ட கப் வண்டிக்காகச் செலுத்தப்பட்ட ரூபா 1,029,763 தொகையான கடன் தவணைப்பணம் மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 1,155,401 தொகையான வட்டித் தொகையும் வரித் தொகைக் கொடுப்பனவும் மூலதனச் செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட முத்திரைக் கட்டணம் ரூபா 2,971,840 தொகையான போதிலும் அது நிதிநிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 2,311,842 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையான முத்திரைக் கட்டணம் ரூபா 659,998 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(எ) மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையாகக் காணப்பட்ட நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,631,791 தொகையான போதிலும் நீதிமன்றத் தண்டப்பண நிலுவை வருமானம் நிதிநிலைமை தொடர்பான கூற்றில் ரூபா 2,208,798 ஆகக் காண்பிக்கப்பட்டிருந்தமையால்

மீளாய்வாண்டின் இறுதியில் நிலுவையான நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 577,007 தொகையால் அதிகரித்துக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஏ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 21,629,722 தொகையான போதிலும் பேரேட்டுக் கணக்கின் படி, இம் மீதி ரூபா 14,217,482 தொகையானமையால் வெளிப் பொறுப்புகள் ரூபா 7,412,240 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தன.

(ஐ) உள்நாட்டுக் கடன் மற்றும் அபிவிருத்தி நிதியத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய நிலுவையான வட்டி ரூபா 2,558,512 தொகையான போதிலும் கடன் கொடுத்தோரின் கீழ் ரூபா 294,338 மாத்திரம் கணக்கீடு செய்யப்பட்டிருந்ததன் காரணமாக ஆண்டிற்கான செலவினம் ரூபா 2,264,174 தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஒ) பஸ் தரிப்பிடத்தில் பஸ் தரிப்பதற்கான கட்டணம் அறவிடப்படுவதற்காக ரூபா 2,000,100 தொகைக்கு கேள்வி வழங்கப்பட்டிருந்த போதிலும் மேற்குறித்த வருமானம் மீளாய்வாண்டில் வருமானமாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

03 கணக்கு விடயங்களுக்கு உரித்தாக மீளாய்வாண்டில் நிதிக்கூற்றுக்களின் படி மீதிகளினதும் பட்டோலைகளினதும் படியான மீதிகளின் வேறுபாடு ரூபா 1,485,285 ஆகக் காணப்பட்டது.

### 1.3.3 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்கள் என்பவற்றுடன் இணங்காமை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாண ஏற்பாடுகள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுக்கு இணக்கமின்மைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணக்கமின்மைகள் |
| --- | --- |
| (அ) இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 371(2) | பல வருடகாலமாக நிலவிவரும் ரூபா 1,142,679 தொகையான முற்பணம் மீளத் தீர்க்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 570 மற்றும் 571 | 1999 ஆம் ஆண்டு முதல் நிலவிவரும் ரூபா 3,148,327 தொகையான வைப்புக்கள் தொடர்பாக ஏற்பாடுகளின் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,178,284 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 12,744,440 ஆக இருந்தது.

### 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதிச் செயற்பாட்டு மிகை ரூபா 8,433,844 தொகையால் அதிகரித்திருந்ததுடன் இது முன்யை ஆண்டைப் பார்க்கிலும் 66 சதவீத அதிகரிப்பாகும். இதற்கு முக்கியமாக கடந்த ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் குத்தகை, ஆணைச்சீட்டுக் கட்டணம் மற்றும் தண்டப்பணமும் ஏனைய வருமானங்களின் முறையே 59 சதவீதம், 117 சதவீதம் மற்றும் 299 சதவீத அதிகரிப்பும் போக்குவரத்துச்

செலவினங்கள் மற்றும் ஓய்வூதியச் சம்பளங்களின் முறையே 56 சதவீதம், 32 சதவீத குறைவும் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிருவாகம்

### 2.3.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| வீதவரியும் வரியும் | 18,374 | 17,869 | 29,339 |
| வாடகை | 9,958 | 11,325 | - |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 3,492 | 1,447 | - |
| ஏனைய வருமானம் | 8,699 | 8,247 | 6,005 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பிடப்பட்ட மற்றும் சேகரிக்கப்பட்ட வருமானத்தை ஒப்பீடு செய்த போது ஆதனவரி, அனுமதிப்பத்திரக் கட்டணம், சேவைக்கான கட்டணம், ஆணைச்சீட்டு மற்றும் தண்டப்பணம் மற்றும் ஏனைய வருமானங்கள் போன்ற வருமான விடயங்களிலிருந்து சேகரிக்கப்பட்ட வருமானம் மதிப்பிடப்பட்ட வருமானத்தை விட் முறையே 35 சதவீதம், 58 சதவீதம், 06 சதவீதம், மற்றும் 78 சதவீதமான 15 சதவீதக் குறைவு காண்பிக்கப்பட்டது.

### 2.3.3 வீத வரி

------------------

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட வீதவரித் தொகை ரூபா 29,264,017 தொகையானதுடன் நிலுவையான வீத வரி மீதி வருடாந்தம் அதிகரிக்கும் நிலை காண்பிக்கப்பட்டது.

### 2.3.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

----------------------------

2014 நவம்பர் 21 ஆம் திகதிய 1890 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் ஏற்பாடுகளின் பிரகாரம், வியாபார அனுமதிப்பித்திரம் ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக்கொள்ளப்பட வேண்டிய போதிலும் கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 யூலை மாதமளவிலும் வியாபார அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதில் நிலுவையாகக் காணப்பட்ட 51 சந்தர்ப்பங்களும் 2013 ஆம் ஆண்டிற்கு ஒப்பாக 2014 ஆம் ஆண்டின் வரி அறவீடுகளில் நிலுவையாகக் காணப்பட்ட 104 சந்தர்ப்பங்களும் அவதானிக்கப்பட்டன.

### 2.3.5 ஏனைய வருமானம்

--------------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபையின் அதிகார எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பிரபல்யமான 15 விளம்பரப் பதாதைகளுக்காக குறித்த கட்டணம் செலுத்தப்பட்டு மீள புதுப்பிக்கும் காலஎல்லை நிறைவடைந்திருந்த போதிலும் மீள கட்டணம் செலுத்தப்பட்டு கால எல்லை நீடிக்கப்பட்டிராததுடன் இதன் காரணமாக சபைக்குக் கிடைக்கப்பெற்றிராத வருமானம் ரூபா 62,600 ஆகக் காணப்பட்டது. கட்டணம் அறவிடப்படக் கூடிய விளம்பரப் பதாதைகள் இனங்காணப்பட்டு இதன் மூலம் குறித்த வரித் தொகை அறவிடப்பட வேண்டிய போதிலும் இதற்காக தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சபைக்குரித்தான பஸ் தரிப்பிடங்களுக்காக பஸ் தரிப்பிடக் கட்டணங்கள் அறவிடப்படுவதற்காக 2014 ஆம் ஆண்டின் போது கேள்வி கோரப்பட்டு குத்தகைக்கிடப்பட வேண்டிய போதிலும் குறித்த குத்தகையாளர் அச் செயற்பாட்டை விட்டுச் சென்றிருந்தமையால்

பஸ் வண்டிகளிலிருந்து கட்டணம் அறவிடப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

### 2.3.6 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

2014 மே 01 முதல் 2015 பெப்ரவரி 27 ஆம் திகதி வரை எம்பிலிபிட்டிய நீதவான் நீதிமன்றத்திலிருந்து பெறவேண்டிய நீதிமன்றத் தண்டப்பணத் தொகை ரூபா 787,687 ஆக மதிப்பிடப்பட்டிருந்த போதிலும் அத் தொகை அறவிடப்படுவதில் காமதம் காணப்பட்டது.

### 2.3.7 பொதுச் சந்தைக் கடைக் குத்தகை

(அ) புதிய நகரின் வாராந்த சந்தை வளாகத்தில் சந்தைத் தொகுதியின் 32 கடைகளுக்கு உரித்தான உடன்படிக்கைகள் பிணையாக ரூபா 126,000 தொகை வைப்புச் செய்யப்பட்டிராததுடன் 17 கடை குத்தகையாளர்களால் மொத்த பிணைத்தொகையான ரூபா 100,000 இற்குப் பதிலாக ரூபா 25,000 படி பிணையாக வைப்புச் செய்யப்பட்டிருந்தது.

(ஆ) பொதுச் சந்தையின் 08 கடைகளின் குத்தகைக்காக குத்தகையாளர்களிடமிருந்து 2013 யூலை 14 ஆம் திகதி முதல் 2015 யூன் வரை வாடகையாக ரூபா 444,500 தொகை அறவிடுவதற்கிருந்தது. முறையான வகையில் உடன்படிக்கையிடப்படாத மற்றும் தொடர்ந்தும் கொடுப்பனவுகள் மேற்கொள்ளத் தவறிய மேற்குறித்த கடைக் குத்தகையாளர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதும் அவர்களால் உடைமைகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கும், தொடர்ந்தும் தாமதமாகியிருந்தது.

(இ) பல்லேகம பொதுச் சந்ததையின் 59 கடைகளிலிருந்து சபையால் வருடாந்த கேள்விப் பத்திரங்கள் கோரப்படுவதன் மூலம் வியாபாரத்தின் உரிமை குத்தகைக்கிடும் கடைகளின் எண்ணிக்கை 04 ஆன போதிலும் உடன்படிக்கையிடப்படாத கடை குத்தகையாளர்களின் எண்ணிக்கை 32 ஆகக் காணப்பட்டது. இக் கடைக் குத்தகையாளர்கள் தமது குத்தகைக் கொடுப்பனவைத் தொடர்ந்தும் செலுத்தத் தவறியிருந்தமையால் மீளாய்வாண்டின் இறுதியில் சபைக்குக் கிடைக்கத்தவறிய தொகை ரூபா 1,253,300 ஆகக் காணப்பட்டது.

(ஈ) பஸ் தரிப்பிட வளாகத்தில் நிர்மாணிக்கப்பட்ட தற்காலிகமான 40 கடைகளில் 32 பேர் உடன்படிக்கை ஏற்படுத்தியிராததுடன் 36 கடை உரிமையாளர்களிடமிருந்து மீளாய்வாண்டின் போது ரூபா 2,215,500 தொகையான நிலுவை வாடகை அறவிடுவதற்கிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

## 3.1 செயற்பாட்டு திறமையீனங்கள்

நகர சபை உறுப்பினர்கள் மற்றும் செயலாளரின் தாயிலாற்து வெளிநாட்டு சுற்றுப்பயணத்தில் ஈடுபட்டமைக்காக முற்பணமாக தனியார் நிறுவகத்திற்கு 2013 யூலை 04 ஆம் திகதி ரூபா 210,000 தொகை செலுத்தப்பட்டிருந்த போதிலும், இச் சுற்றுலா செயற்படுத்தப்பட்டிராததுடன் முற்பணமாக அப் பணம் வழங்கப்பட்டு ஒரு வருடத்திற்கு மேற்பட்ட காலம் கடந்திருந்த போதிலும் மீள அறவிடப்படுவதற்கோ அல்லது சட்ட நடவடிக்கைகளோ எடுக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.2 முறையற்ற கொடுக்கல்வாங்கல்கள்

(அ) உள்ளூராட்சி நிறுவகங்களின் தலைவர்களுக்கான போக்குவரத்துச் செலவினங்கள் கொடுப்பனவு செய்யப்படுகையில் நிறுவகத்தின் நிர்வாக நடவடிக்கைகளுக்கு நேரடியாகத் தொடர்புடைய உத்தியோகபூர்வக் கடமைகளை மேற்கொண்டமைக்காக அதிகாரப்பகுதியிலிருந்து வெளியே சென்ற பயணங்களுக்காக மாத்திரம் ஒன்றிணைந்த படிப்பணம் செலுத்த முடியும் என உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் 2009 திசெம்பர் 22 ஆம் திகதிய ப.பா.கொ.1/2009 (திருத்தப்பட்டது) ஆம் இலக்க சுற்றறிக்கையின் மூலம் எடுத்துரைக்கப்பட்டிருந்த போதிலும் தமது உத்தியோகபூர்வ அல்லது உத்தியோகம் தொடர்பாக எவ்வித உறுதிப்படுத்தலும் இன்றி 2011, 2012, 2013 ஆம் 2014 ஆம் ஆண்டுகளின் போது ஒன்றிணைந்த படிப்பணமாக ரூபா 63,750 தொகை தலைவருக்குச் செலுத்தப்பட்டிருந்தது. மேலும், மேற்குறித்த செலவினத்தை ஏற்கையில் குறித்த ஆண்டிற்கான செலவினம் கடன்கொடுத்தோரின் கீழ் ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011, 2012 ஆம் 2013 ஆம் ஆண்டுகளுக்கான போக்குவரத்துச் செலவினக் கொடுப்பனவாக தலைவரின் சாரதிக்கு ரூபா 35,848 தொகை செலுத்தப்பட்டிருந்ததுடன் உள்ளூராட்சி நிறுவக சாரதிகளுக்காக மேலதிக மற்றும் ஒன்றிணைந்த படிப்பணக் கொடுப்பனவு தொடர்பாக 2009 ஒக்டோபர் 07 ஆம் திகதிய 2/2009 ஆம் இலக்க உள்ளூராட்சி ஆணையாளர் நாயகத்தின் சுற்றறிக்கையின் படி நகர சபை சாரதிக்கு வழங்கப்படக் கூடிய நாட்கள் ஒரு மாதத்திற்கு 06 நாட்களாகும். அதன் ஏற்பாடுகள் கருத்திற்கொள்ளப்படாது கடந்த ஆண்டிற்கு உரித்தான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படாது 11421 செலவினத் தலைப்பின் கீழ் ஏற்பாட்டிற்கு மேலாக செலவினம் ஏற்கப்பட்டிருந்தது.

### 3.3 ஒப்பந்த நிருவாகம்

------------------------------

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2013 யூன் 26 ஆந் திகதிய 03 மாதங்களுக்காக ரூபா 981,418 தொகையான கிரயத்திற்கு உடன்படிக்கை இடப்பட்டிருந்த நகர சபை ஏற்பாட்டின் கீழ் மேற்கொள்ளப்பட்ட புதிய நகர தெற்கு வாய்க்கால் தொடக்கம் புதிய நகர பாலம் வரை வீதிக்கு கிரவல் இட்டு அபிவிருத்தி செய்யும் துறைக்காக கணக்காய்வுச் சந்தர்ப்பமான 2015 யூன் மாதம் வரையிலும் 10 கிரவல் கியூப் மாத்திரம் வேலைத்தளத்திற்குக் கொண்டுவரப்பட்டு இடப்பட்டதாகவும் வீதிக்காக மண் நிரப்பி செப்பனிட வேண்டிய பகுதிக்காக மதிப்பீடு செய்யப்பட்டு துறையின் வேலை பூர்த்திசெய்யப்படுவதற்காக சபையின் கவனம் ஈர்க்கப்பட்டிராமையும் அவதானிக்கப்பட்டது. மேலும், இத் துறைக்காக 2013 யூலை 29 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்த ரூபா 190,000 தொகையான முற்பணத் தொகையும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) உடன்படிக்கையின் பெறுமதி ரூபா 469,931 தொகையான நகர சபை ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட புதிய நகர தெற்கு வாய்க்கால் தொடக்கம் புதிய நகர பாலம் வரை கால்வாய் அமைக்கும் துறைக்காக ரூபா 387,008 தொகை 2014 ஒக்டோபர் 27 ஆம் திகதி கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. கால்வாய் முறைப்படி மண்ணால் நிரப்பப்பட்டு அச் செயற்பாடு முறையான வகையில் பூர்த்திசெய்யப்பட்டிருக்கவில்லை எனவும் அக் கால்வாய் நிர்மாணிப்பு

எவ்வித பயன்பாடும் கணக்காய்வுப் பரிசோதனைச் சந்தர்ப்பமான 2015 யூன் மாதம் வரையிலும் மேற்கொள்ளப்பட்டிராமை அவதானிக்கப்பட்டது.

(இ) நகர சபை ஏற்பாட்டின் கீழ் செயற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் பெறுமதி ரூபா 966,894 தொகையான தர்ஷனகம குள வீதி செம்பண் இட்டு மேம்படுத்தும் பணிக்கு உரித்தாக மேற்கொள்ளப்பட்டிராத 100 மீட்டர் நீளமான வேலைப்பகுதிக்காக 2014 மார்ச் 10 ஆம் திகதி ரூபா 69,046 தொகையான கொடுப்பனவும் முறையான வகையில் அபிவிருத்தி செய்யப்படாத 400 மீட்டர் அளவிற்கு உரித்தாகச் செலுத்தப்பட்ட ரூபா 276,183 தொகையான பணம் தொடர்பாக கணக்காய்விற்கு உடன்பட முடியாதிருந்தது.

## 3.4 திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்

----------------------------------------------------------------------

சபை அதிகாரத்திற்கு உட்பட்ட பகுதியில் சேகரிக்கப்படும் கழிவுப்பொருள் மீள்சுழற்சி செய்யும் நோக்கில் திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் கந்துருகஸ்ஆர கழிவுச் செயற்திட்டத்தின் கழிவுப் பிரிவிலிருந்து லீசெட் நீர் தாங்கி வரையிலும் லீசெட் நீர் வழிந்தோடும் கால்வாய் நிர்மாணிக்கப்பட்டிராமையும், அறையில் கூரைக்கு சீலிங் இடப்பட்ட தகடு கழன்றிருந்தமையும், அதிகாரப்பகுதியில் சேரும் கழிவுப் பொருட்கள் எம்பிலிப்பிட்டிய கடதாசித் தொழிற்சாலை வளாகத்தில் திறந்த இடத்தில் அகற்றப்பட்டிருந்தமையும் 2015 யூலை 06 ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட பௌதீக ஆய்வின் போது அவதானிக்கப்பட்டது.

## 4. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

--------------------------------------------------------------

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு
(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(இ) வருமான நிருவாகம்
(ஈ) ஒப்பந்த நிருவாகம்
(உ) திண்மக் கழிவுப் பொருள் முகாமைத்துவம்